தும்பலப்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள் --
முன்னிலை : திருமதி க.வசந்தி அவர்கள்

ந.க.எண் 22 /2023-2024/து.ஊ..... நாள்: 15.03.2024

பொருள்: மனைப்பிரிவு அங்கீகரித்தல் - திண்டுக்கல் மாவட்டம் - பழனி வட்டம் - தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியம் - தும்பலப்பட்டி ஊராட்சி/ கிராமம் - நில அளவு எண் சர்வே எண்கள் 171/1A,174 மற்றும் 175-இல் ச.மீ. 38700 அல்லது 9.56 ஏக்கர் பரப்பளவு உள்ள இடத்தில் னை எண்கள் 1 முதல் 179 (மொத்தம் 179) மனைகளாகப் பிரிக்கப்பட்டு துனை யக்குநர்,மாவட்டநகர் ஊரமைப்பு அலுவலகம், திண்டுக்கல் மாவட்டம் - தொழில்நுட்ப ப்புதல் அனுமதி வழங்கப்பட்ட மனைகளை அங்கீகரித்து உத்தரவிடுதல் - தொடர்பாக.

1. திரு.P.தட்சிணாமூர்த்தி மற்றும் இருவர் என்பவரது மனு நாள் : 14.02.2024
2. துணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திண்டுக்கல் மாவட்டம், விண்ணப்ப எண்.NJN 7QDL1 TCP, நாள்:12.10.2022
3. நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்.19799/2020 போ. நாள்.24.12.2020
4. அரசாணை எண்.138, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை, நாள்.04.06.2004.
5. அரசாணை எண்.79, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை, நாள்.04.05.2017.
6. அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.04.02.2019,மற்றும் அரசாணை எண்.16,நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்: 31.01.2020.
7. அரசாணை எண்.141,வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை,UD4(3), நாள்: 23.09.2020.
8. அரசாணை எண்.181, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை, நாள்.09.12.2020.
9. அரசு கடிதம் எண்.19113/நவ4(3)/2017-1, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, நாள்.30.08.2017.
10. நகர் ஊரமைப்பு ஆணையாளர், அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்:13686/2017/ LA1, நாள்.08.09.2017.
11. துணை இயக்குநர்,மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,திண்டுக்கல் மாவட்டம். விண்ணப்ப எண். NJN7QDL1 ROC NO.320/2022/TCP3, நாள்.07.01.2022
12. அசல் தான பத்திரம் எண்:2368/2022,நாள்: 21.09.2022 மற்றும் TANGEDCO அசல் தான பத்திரம் எண்: 2369/2022, நாள்: 21.09.2022
13. மனுதாரர் கட்டணங்களை அரசு தலைப்பில் செலுத்திய நாள்: 16.03.2024
14. ஊராட்சி மன்ற தீர்மான எண்.22/2024, நாள்:15.03.2024.

உத்திரவு

திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியம், தும்பலப்பட்டி ஊராட்சி/ கிராமம் - நில அளவு எண். 171/1A,174 மற்றும் 175-இல் ச.மீ 38700 அல்லது 9.56 ஏக்கர் பரப்பளவு உள்ள இடத்தில் மனை எண்கள் 1 முதல் 179 மற்றும் (மொத்தம்179) மனைகளாகப் பிரிக்கப்பட்டு SWP/DTCP/DINDIGUL/ LAYOUT/NO:**47/2022** என எண்ணிடப்பட்டு, பார்வை 11-ல் கண்டவாறு ஒப்புதல் வரப்பெற்றது. அதனைத் தொடர்ந்து 179 மனைகள் 9.56 ஏக்கர் 38700 ச.மீ மனுதாரர் செலுத்த வேண்டிய கட்டணங்களை மொத்த பரப்பில் 38700 ச.மீ சாலையின் பரப்பு 14,773.7 ச.மீ நீங்கலாக மீதமுள்ள மொத்த மனைகளின் பரப்பிற்கு 23923.3 ச.மீக்கு ரூ.284,650/- கூராய்வு கட்டணம் ரூ.1000/- வீதம் 179 ரூ.179,000/- மட்டும் தும்பலப்பட்டி ஊராட்சி கணக்கில் நாள்:15.03.2024 அன்று (பல்வகை ரசீது எண்:2023-2024/22/10/35/7/82 நாள்:15.03.2024) மற்றும் நிலப்பயன் மாற்றக் கட்டணம் சந்தை மதிப்பில் 3 சதவீதம் தொகை ரூ.2,84,650/- ஐ உரிய அரசு தலைப்பில் நாள் மனை எண்கள் 1 முதல் 179 (மொத்தம் 179 மனைகள்) தும்பலப்பட்டி ஊராட்சி மன்ற தீர்மான எண்:22/2024 நாள்: 15.03.2024ன் அடிப்படையில் அங்கீகரித்து இதன் வழி உத்தரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்:

1. நகர் ஊராமைப்புத்துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள் சாலையின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மனையினை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணம் கொண்டும் நகர் ஊரமைப்புத் துறையின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.
2. ஒவ்வொரு மனையின் பின்புற எல்லைக்கும் கட்டிடத்திற்கும் இடையில் மனையின் மொத்த அகலத்திற்கு வியாபிக்கின்ற வகையில் ஊராட்சி பகுதிக்கு குறைந்தது 3 மீட்டர் அளவுள்ள திறந்தவெளி இருத்தல் வேண்டும். இந்த பின்பக்க திறந்தவெளியில் கிணறுகள், கழிப்பறை, எருக்குழி, மாட்டுத்தொழுவம் கார்செட், கொட்டகை போன்ற குடியிருப்பு அல்லாத ஆனால் அதைச்சார்ந்த கட்டிடம் மட்டும் அமைக்கப்பட வேண்டும். ஆனால் கட்டிடங்கள் மொத்தமாக பின்பக்க எல்லையில் நீளத்தில் மூன்றில் ஒருபாகத்திற்கு மேற்படாமலும் மனையின் பின்பக்க நில மட்டத்திலிருந்து 3 மீட்டர் உயரத்திற்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.
3. மனைப்பிரிவின் பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்த வேண்டும்.
4. மனைப்பிரிவில் ஒதுக்கப்பட்ட கடைகளுக்கான மனையை வரைபடத்தில் காட்டியுள்ளது போல் உட்பிரிவு செய்யப்பட வேண்டும். மனைகளை அதற்குரிய உபயோகத்திற்கு மட்டும் பயன்படுத்தப்பட வேண்டும்.
5. விற்பனைக்கு உண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத்துறையால் ஒப்புதல் அளிக்கப்பட வரைபட நகலினை மனையினை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

6. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவின் நுழைவுவாயிலில் 6 x 4 அளவிலான நிரந்தர தகவல் பலகையின் மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக வைக்கப்பட வேண்டும்.

K. Vasanthi

தலைவர்
தும்பலப்பட்டி பேரூராட்சி

இணைப்பு:

1. அங்கீகரிக்கப்பட்ட வரைபட பிரதிகள்.

பெறுநர்:

திரு.P.தட்சிணாமூர்த்தி மற்றும் இருவர்கள்
த/பெ பழனிச்சாமி ,
3/112D கிழக்கு உடையார் தோட்டம்,
பீடம்பள்ளி ஒண்டிப்புதூர்,
கோயம்புத்தூர் மாவட்டம்.

நகல்:

சார்பதிவாளர்,
சார்பதிவாளர் அலுவலகம்,
கீரனூர்.
பழனி தாலுக்கா,
திண்டுக்கல் மாவட்டம்.